# காதல் எனப்படுவது யாதெனில்...

## காதலை அமிர்தமாகவோ, விஷமாகவோ மாற்றுவது எது?



**கா**தல் என்பது சரியா? தவறா? என்றைக்கும் புதிதாகத் தெரிகிற பழைய கேள்வி இது.

'இப்படிப்பட்டதுதான் காதல்' என்று யாராலும் கட்டம் கட்டி இலக்கணம் சொல்லி விட முடியாது என்பதுதான் காதலின் சிறப்பே. காதல், சிலருக்கு அமிர்தம். சிலருக்கு விஷம்! சிலருக்கு அது புனிதம், நம்பிக்கை, ஏகாந்தம். வேறு சிலருக்கோ அது... புதிர், ஏமாற்றம், பயம்!

ஏன், இப்படி காதலின் முகம் ஆளாளுக்கு மாறுபடுகிறது? அதை அமிர்தமாகவோ, விஷமாகவோ மாற்றுவது எது? நம்பிக்கையான காதலின் நிறம் என்ன? ஏமாற்றம் தரும் காதலின் உருவம் என்ன?



ராஜ்மோகன்



காதல் தந்த மனக்குழப்பங்களோடு வந்த ஆயிரக்கணக்கான இளைஞர், இளைஞிகளுக்கு கவுன்சிலிங் தந்த அனுபவம் கொண்ட பிரபல கவுன்சிலர் ராஜ்மோகன், காதலை இங்கே 'போஸ்ட் மார்ட்டம்' செய்கிறார். உண்மையை அறிய, நாமும் அவரோடு பயணிப் போம்.

**சி**ல வருடங்களுக்கு முன்பு என்னிடம் சிகிச்சைக்காக வந்த பெண் அவள். தொலைவில் இருக்கும் வரை சாதாரணமாகவே தெரிந்த அந்தப் பெண்ணிடம், அருகில் வந்த போது மிக மெல்லிய ஒரு முனகல் சத்தம் கேட்டது. "டெல்லி... டெல்லி போகணும்... போய் பார்த்துடணும்!" என்று படபடத்துக் கொண்டிருந்தாள்.



நல்ல குடும்பம். அன்பான அம்மா, அப்பா. ஒரு தனியார் கம்பெனியில் நல்ல வேலையும் கூட. அழகு, அறிவு, அந்தஸ்து எல்லாம் இருந்தும் அந்தப் பெண்ணுக்கு ஒரு பிரச்னை. வேறென்ன? காதல்தான்!

அவள் பெயர்... வேண்டாம். நம் வசதிக்காக 'அமலா' என்று அழைப்போம். கரையாத அவளது மனசை கடற்கரைகளில் வைத்து கரைத்த காதலனை 'ராகேஷ்' என்று குறிப்பிடுவோம்.

வானம், பூமி, தியேட்டர், ஐஸ்கிரீம் பார்லர் என்று சாட்சிக்கு அழைக்க முடியாத எல்லாவற்றின் மீதும் சாட்சியாக அவர்கள் காதல் வளர்ந்தது. வழக்கம்போல விஷயம் பெண்வீட்டாருக்கு தெரிய வர, வழக்கம்போல வீடு கொந்தளிக்க, வழக்கமான பெண் போல் இல்லாமல், தனக்கும் ராகேஷுக் குமான அன்பின் கனத்தை எல்லோருக்கும் புரியவைத்திருக்கிறார் அமலா.

"ராகேஷ் எனக்காகவே பிறந்தவர். என்னை எப்பவும் கைவிட மாட்டார். எனக்காகவே வாழ்க்கையில முன்னேறணும்னு நினைக்கிறார். அதனாலதான் வேலை விஷயமா டெல்லிக்குப் போறார். அது சக்ஸஸ்ஃபுல்லா முடியட்டும்... அடுத்து கல்யாணம்தான்'' என்று சொன்ன அமலாவின் வார்த்தைகளில் இருந்த தெளிவு, அவள் பெற்றோரை சம்மதிக்க வைத்திருக்கிறது.

ஆனால், டெல்லிக்குப் போன ராகேஷ், மெல்ல மெல்ல அமலாவைத் தவிர்த்து, கடைசி யில் தொடர்பு கொள்ளவே முடியாதபடி தொலைந்து விட்டான். ஏன் இப்படி? தன்னை மறக்கக்கூட அவனால் முடியுமா? வேறு யாராவது அவனுக்கு சிறந்த தேர்வாக தெரிந்திருப்பார்களா? - இது போன்ற தொடர் கேள்விகள் தான் அமலாவின் மன அழுத்தத்துக்குக் காரணம்.

மூன்று வருடங்கள் இந்த நரக வேதனையில் முடிந்து விட்டன. ஆரம்பத்தில் "ராகேஷ் எப்ப வர்றாராம்?" என்று கேட்டு கிண்டலடித்த கல்லூரி தோழிகள் எல்லாம் இப்போது தங்கள் குழந்தைகளோடு வந்து கிண்டலடித்து விட்டுப் போகிறார்கள். எத்தனை பேரிடம் எத்தனை பொய்கள் சொல்வது? கடைசியாக, ஒரு தோழியிடம் எல்லாவற்றையும் சொல்லி வெடித்து விட்ட அமலாவால், என்னிடம் வரும் வரை அழுகையை நிறுத்த முடியவில்லை.

நகமும் சதையும், ஈறும் பல்லும் என்று தங்கள் காதலுக்கு எவ்வளவோ உவமைகளை அமலாவால் சொல்ல முடிகிறதே தவிர, ராகேஷைப் பற்றிய எந்தத் தகவலையும் அவளால் முழுமையாக தர முடியவில்லை. ஆனால், டெல்லிக்குப் போய் எப்படியாவது அவனை தேடிப் பிடித்துவிட வேண்டும் என்ற எண்ணம் மட்டும் நாடி நரம்பெங்கும் ஓடிக் கொண்டிருந்தது.

இந்த விநோதம் பலருக்கு ஆச்சர்யத்தைத் தரலாம். 'இப்படியும் காதலிப்பார்களா?' என்று கோபமும் வரலாம். இந்த விநோதத்துக்கு காரணம் என்ன என்பதை அலசிப் பார்த்தால் தெளிவு பிறக்கும்.

காதல் என்பதே ஒரு வகையில் திட்டமிடுதல்தான். 'எனக்கு எப்படியும் யாராவது ஒருவன் கணவனாக வரப் போகிறான். என்னை ஓரளவுக்குப் புரிந்து கொண்டிருக்கிற, எனக்காக இவ்வளவு மெனக்கெடுகிற நீயே அந்த ஒருவனாக இருந்தால் நல்லதுதானே' என்று மனம் போடும் கணக்கு, காதலின் முக்கியக் கூறு!

அவன் எவ்வளவு சம்பாதிக்கிறான், என்ன வாகனம் வைத்திருக்கிறான், அவன் வீட்டில் எத்தனை பேர் என்பதையெல்லாம் சேர்த்து அந்தக் கணக்கைப் போடுவதில் எந்தத் தவறும் இல்லை. 'பிரதிபலன் பார்க்காமல் வருவதுதான் உண்மையான காதல். கணக்குப் பார்ப்பது காதலுக்கே களங்கம்' என்றெல்லாம் இளைஞர்களிடம் பரவலாக இருக்கும் உணர்ச்சிவசப் பட்ட வாக்கியங்கள்தான் இப்படிப்பட்ட பிரச்னை களுக்குக் காரணம்.

சரி, காதலித்துவிட்டோம்... அவன் ஏமாற்றிவிட்டால் என்ன செய்வது? அமலாவைப் போல் தன்னை மறந்து திரிய வேண்டியது தானா என்றெல்லாம் மறுகுகிறவர் களுக்காக ஒரு சின்னக் கதை...

காதலியைப் பிரிந்து போர்க்களத்தில் இருந்த ஒரு ராணுவ வீரனுக்கு அவன் காதலியிடமிருந்து ஒரு கடிதம். 'நீ சென்ற பிறகு எனக்கு ஒரு பாய்ஃபிரண்ட் கிடைத் தான். அவனைத்தான் நான் மணக்கப் போகிறேன். அதனால், உன்னிடம் உள்ள என் புகைப்படத்தை திருப்பி அனுப்பிவிடு' என்று அதில் எழுதியிருந்தது.

அவளுக்கு பதிலடி கொடுக்க நினைத்த அவன், சக வீரர்களின் காதலி, தோழிகள் என்று பல பெண்களின் புகைப்படங்களையும் சேகரித்து, அவற்றோடு அந்தக் காதலியின் புகைப்படத்தையும் சேர்த்து அனுப்பினான். கூடவே, ஒரு கடிதம்...

'உங்கள் கடிதம் கிடைத்தது. எவ்வளவு யோசித்தும் உங்கள் முகம் எனக்கு ஞாபகம் வரவேயில்லை. அதனால் நான் இதுவரை சந்தித்த எல்லா பெண்களின் புகைப்படத்தையும் அனுப்பி உள்ளேன். உங்கள் படத்தை எடுத்துக் கொண்டு, மற்றதை திருப்பி அனுப்பி விடவும்!'

நம்மைப் புறக்கணிப்பவர்களுக்கு சரியான தண்டனை நாம் அவர்களைப் புறக்கணிப்பதுதான். அவன் நல்லவனோ... கெட்டவனோ, கெட்டவன் என்று நினைத்துக் கொள்வதுதான் நமக்கு நல்லது. 'கிட்டாதாயின் வெட்டென மற'. அவ்வளவுதான்!

இந்த விஷயங்களையெல்லாம் சிறுக சிறுக ஏற்றுக்கொண்ட அமலாவின் மனம், மெல்ல தெளிவடைந்து, தன் கவலைகளை எல்லாம் கலகலப்பாக்கிக் கொண்டது.

இப்படி சுமுகமாக தீர்த்து வைக்கக்கூடிய பிரச்னையோடு தன் லீலையை நிறுத்திக் கொண்டு விடுகிறதா காதல்?

– **ஆராய்வோம்...**